1972 ஆகஸ்ட் 12]

இசைக் கருவிகள் உற்பத்தி

* 100 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் கூட்டுறவுத் துறையில் சங்கீதக் கருவிகள் செய்யும் தொழிற்சாலே ஒன்று இயங்கி வருகின்றதா?

(இ) அங்கு எந்தெந்த இசைக்கருவிகள் செய்யப்படுகின்றன?

(உ) இதற்கு கடன் அல்லது மானியத்தொகை ஏதேனும் அரசு வழங்கி வருகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம். இத்தொழிற்சாலே ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கமாக இயங்கி வருகிறது.

(இ) அங்கு வீணே, தம்புரா, மிருதங்கம், தபேலா, கஞ்சிரா போன்ற இசைக்கருவிகள் செய்யப்படுகின்றன.

(உ) இச்சங்கத்திற்கு அரசு கடனும் மானியத்தொகையும் வழங்கியுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டின் பண்டைய இசைக் கருவியாகிய நாயனக் கருவி செய்வதற்கும் அரசு ஆக்கம் அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே போதுமான அளவு இருக்கிறது. கூட்டுறவுச் சங்கம் செய்ய முன்வருமாளுல் அதற்கு உதவி செய்யலாம்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : சிதார், புல்புல்தாரா போன்ற கருவிகளும் அங்கே தயாரிக்கப்படுகின்றனவா? அவைகள் அங்கே தயாரிக்கப்படவில்லேயென்ருல் இனிமேலாவது தயாரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எது எது வியாபாரம் நடக்குமோ அதையெல்லாம் அங்கே செய்வார்கள். இப்பொழுது அங்கே ஆர்மோனியம், சுருதிப் பெட்டி, மோர்சிங், புல்புல்தாரா போன்ற இசைக் கருவிகளே வாங்கி விற்பனே செய்கிருர்கள். வீணே, தம்புரா, மிருதங்கம், தபேலா, கஞ்சிரா போன்றவைகளே அங்கே அவர்கள் உற்பத்தி செய்கிருர்கள்.

கூட்டுறவுத் தேயிலேத் தொழிற்சாலேகள்

* 101 வினு—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழில் கூட்டுறவு துறையில் ட பாக்டரிகள் தற்போது எத்தனே உள்ளன?

(இ) அவைகளில் லாபத்தில் நடப்பவை எத்தனே?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாட்டில் தற்சமயம் ஒன்பது கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன.

(இ) இவைகளில் எட்டு லாபத்தில் நடக்கின்றன. ஒன்று இன்னும் உற்பத்தி துவங்கவில்லை.

திரு. கே. ஏ. வகாப் : துணைத் தலைவரவர்களே, இந்த கூட்டுறவு தேயிலை தயாரிக்கும் தொழிற்சாலையில் தயாரிக்கும் தேயிலை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா? ஏற்றுமதி செய்யப்படுகிறதானால் அதன் தரத்தை உயர்த்தி இன்னும் அதிகமான ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கு தயாரிக்கப்படும் தேயிலை நல்ல தரமாக இருப்பதனால்தான் அந்தத் தொழிற்சாலைகள் லாபத்தில் நடைபெறுகின்றன. இந்தத் தேயிலை கொச்சின் ஹார்பர் வழியாக ஏற்றுமதிக்கு அனுப்பப்படுகிறது.

திரு. எம். தேவராசன் : துணைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இன்னும் புதிதாக எத்தனை பகுதிகளில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் அதிகமான கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளைத் தொடங்க வேண்டுமென்று ஒரு மேற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அவைகளைத் தொடங்குவதற்கு ஏராளமாக உதவி வேண்டுமென்று 'டீ போர்டை' வற்புறுத்தி வருகிறோம். அவர்கள் அளிக்கின்ற உதவியைப் பொறுத்து இதில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த டீ பாக்டரிகள் தற்போது எங்கெங்கே உள்ளன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீலகிரி மாவட்டத்தில்.

திறந்த வெளிச் சிறைகள்

* 102 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா--

திறந்த வெளிச் சிறைகள் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தற்பொழுது தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நீலகிரித் தோட்டத்திலும், (2) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரிலும், (3) சேலத்திலும் திறந்த வெளிச்சிறைச்சாலைகள் உள்ளன